# மகளிர் தின வாழ்த்து! 08-03-2020

இல்லற மென்பதை நல்லற மாக்கும்!
பொல்லாப் பிள்ளையை நல்லவ னாக்கும்!
கல்லில் தேனையும் வடிக்கும் அன்பாய்!
சொல்லிலும் செயலிலும் சுந்தர வடிவாய்,

நல்லவைதானே தருவேன் என்று,
எல்லாச் செயலிலும் முகவரி ஆகும்!
சொல்வர் பாதியாய் அவளே என்று!
இல்லையென்று இயம்பிட ஏலுமோ?

அல்லவை நல்லவை யாவிலும் அவளே!
நல்அன்னையின் வடிவம் அன்பின் சோதரி!
எல்லையில் யாவிலும் பெண்மை யன்றோ!
தொல்லை இல் வாழ்வும் அவளே!
நல்துணையுமவளே! மகளீர்நாள் வாழ்த்து!

-கவிவளவன் 08-03-2020